# தமிழ் ஆவண மாநாடு
# 2013

## ஆய்வுக் கட்டுரைக் கோவை

NOOLAHAM
FOUNDATION

நூலகம் நிறுவன வெளியீடு

**Copyright © 2013 by Noolaham Foundation**

All text within this publication is available under the Creative Commons Attribution - NonCommercial - NoDerivs license.

For more Information, Visit http://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/

| | | |
|---|---|---|
| Title | : | Tamil Documentation Conference - 2013<br>Aaivu Kaddurai Kovai |
| First Edition | : | 2014 |
| Published by | : | Noolaham Foundation |
| Printed by | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo - 13.<br>Tel : 011 - 2330195 |
| No of pages | : | XVI + 644 |
| No of Copies | : | 300 |
| Size | : | 6.75 x 9.5 |
| Price | : | Rs. 2000.00 |
| ISBN | : | 978-955-4918-00-9 |

**COVER IMAGE CREDITS**

| | | |
|---|---|---|
| Karagattam | : | S. Siva Saravanan |
| Old books on shelves | : | Adam Woolfitt/Corbis |
| Manuscript | : | Vignesh Rana |
| Paddy Field | : | Sudipto Sarkar |
| Farmer | : | Prashanth Baradwaj |

*Cover & Inner Seperation Pages designed By : E. Arjunar*

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள்காலப் பண்பாட்டுச் செல்வாக்குகள் – ஒரு வரலாற்றுப் பார்வை

க. அருந்தவராஜா

## அறிமுகவுரை

இலங்கையில் தனித்துவமான வரலாற்றினைக் கொண்ட பிராந்தியங்களில் யாழ்ப்பாணக் குடாநாடும் ஒன்றாகும். 16ஆம் நூற்றாண்டின் பின்பாக போர்த்துக்கேயர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களின் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ச்சியாக இலங்கை இருந்தது மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததன் பின்னணியில் இப்பகுதிகள் ஐரோப்பியர்களது பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்ட பிராந்தியங்களாக மாறிக்கொண்டன. அந்தவகையில் இந்துமதத்திலும் இந்துப் பண்பாட்டிலும் ஊறிப்போயிருந்த யாழ்ப்பாண மக்களுக்கு கல்வியினையும், சலுகைகளையும், சில சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தினைப் பிரயோகிப்பதன் வாயிலாகவும் தங்களது அரசியல் நடவடிக்கையினை மட்டுமன்றிக்கூடவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்கார்கள் தங்களது பண்பாட்டுச் செல்வாக்கினையும் ஏற்படுத்தினர். இத்தகைய பண்பாட்டுச் செல்வாக்கானது மதம், மொழி, இலக்கியம், கலை, வாழ்க்கைமுறை போன்ற வடிவங்களில் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் சில அம்சங்கள் பின்னர் வந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்ட நிலையில் காணப்பட பல அம்சங்கள் இன்றுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவர்களின் ஆட்சியின் முக்கியத்துவத்தினையும் சிறப்பினையும் எடுத்துக்கூறுகின்ற வகையில் தலைநிமிர்ந்து காணப்படுகின்றன. அதாவது போர்த்துக்கேயர்களது பண்பாட்டு அம்சங்களை அழித்தோ அல்லது அவர்களது வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியோ டச்சுக்காரர்கள் அவற்றில் தங்களது செல்வாக்கினை இலங்கையில் நிலைநாட்டியது போன்று பின்வந்த ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களைப் போன்று மோசமாக நடந்துகொள்ளாமையின் விளைவாகவே பல டச்சுக்காரர்களின் பண்பாட்டு எச்சங்கள் அவர்களின் செல்வாக்கினை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றுவரை இனங்காட்டி நிற்கின்றன எனலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலப்பகுதி தொடர்பாகப் பல்வேறு வகையான தகவல்கள் கிடைக்கப்பட்டு வந்தாலும் அவை ஒருங்கிணைக்கப்பட்டு அக்காலப் பகுதியிலேற்பட்ட பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பான விடயங்கள் ஆழமாக ஆராயப்படவில்லை. அத்துடன் டச்சுக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பாகவும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பாகவும் இக்கட்டுரை ஆராய்கின்றது. டச்சுக்காரர்களின் ஆட்சியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட புதிய பண்பாட்டம்சங்களைக் கண்டறிவதும் அவை எந்தளவுக்குப் பாரம்பரிய யாழ்ப்பாணப் பண்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தின? அவை தற்காலத்திலும் தொடர்கின்றனவா? என்பதனை ஆராய்வதும் அவற்றினை ஆவணப்படுத்துவதும் சமுதாயத்தின் கட்டாய தேவையுமாகும். எனவே இத்தகைய நோக்கங்களை ஓரளவிற்காவது நிறைவேற்றுவதனை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளதெனலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பாகத் தனித்து எவரும் தற்காலம்வரை ஆய்வினை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அதேநேரத்தில் டச்சுக்காரர்கள்கால யாழ்ப்பாணத்தினைப் பற்றிப் பல்வேறு நூல்களும் கட்டுரைகளும் ஆராய்ச்சியாளர்களினால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றிலும்கூட யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பண்பாடு பற்றிய செய்திகள் விரிவாக காணப்படவில்லையென்றே கூறுதல் வேண்டும். குறிப்பாக P.E.Pieris எழுதிய Ceylon and the Hollanders (1658 – 1796), K.M.de, Silva. & W.G.M, Beumer ஆகியோர்கள் எழுதிய Illustrations and Views of Dutch Ceylon (1602 – 1796) , K.M.de, Silva எழுதிய A History of Sri Lanka, S. Arasaratnam எழுதிய The Dutch Power in Ceylon 1658 – 1687) S.G.Perera எழுதிய History of Ceylon. செ. கிருஸ்ணராஜாவின் இலங்கைவரலாறு மற்றும் பேராசிரியர் சி.பத்மநாதன், கலாநிதி மு.குணசிங்கம் போன்றவர்களது நூல்களும் கட்டுரைகளும்கூட அவர்களது பரந்த ஆய்வில் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குச் சம்மந்தமான விடயங்களைக் கூறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வில் வரலாற்று ரீதியான அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. சமகாலத்தில் மதம் பரப்புரைக்காக வந்த புரட்டஸ்தாந்துக் குருமார்கள் எழுதிய குறிப்புக்கள், நெதர்லாந்து சென்று யாழ்ப்பாணந் தொடர்பான சான்றுகளைச் சேகரித்து எழுதப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள், டச்சுக்காரர்கள்கால நினைவுச் சின்னங்கள், அழிபாடுகள் போன்றன பிரதான முதல்தர ஆதாரங்களாக ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஆய்வுக்குத் தேவையான இரண்டாந்தரச் சான்றுகள் வரிசையில் டச்சுக்காரார்களது காலந்தொடர்பாக பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பன இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## டச்சுக்காரர்களின் இலங்கை வருகை

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக ஏகாதிபத்திய நோக்குக்கொண்ட சில அரசுகள் ஆதிக்க விஸ்தரிப்புக்கான முயற்சிகளில் இறங்கிக்கொண்டன. *(Perera,S.G,1948,P.245)* இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்ட நாடுகளில் போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, வடஅமெரிக்க, தென்னமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளைத் தங்களது குடியேற்றங்களாகக் கொண்டிருந்ததுடன் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட பௌதீக மற்றும் மனித வளங்களைத் தங்களது நாட்டின் நலன்களுக்காகவும் இவை பயன்படுத்திக்கொண்டன. *(குணராசா.க..கமலா.கு.2008.பக்.252-254)* மேலும் இந்நாடுகள் தங்களது நிர்வாக முறைகளை கைப்பற்றிக் கொண்ட நாடுகளில் அறிமுகப்படுத்திக் கொண்டதன் மூலமாக அப்பகுதிகளின் மக்களைத் தங்களது விசுவாசிகளாக குறுகிய காலப்பகுதியில் மாற்றிக்கொள்வதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டன. இந்நாடுகள் குடியேற்ற நாடுகளில் கிறிஸ்தவத்தினைப் பரப்புதல், தம்நாட்டவரை அங்கே குடியேற்றுதல் என்பனவற்றின் மூலமாகவும் அவர்களது கொள்கையினைக் கைப்பற்றப்பட்ட நாடுகளில் விரிவுபடுத்தியும் கொண்டன. இத்தகைய காலனித்துவ ஆட்சியாளர்களிலொருவரான போர்த்துக்கேயர்கள் 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகள்மீது தங்களது கவனத்தினைச் செலுத்த ஆரம்பித்தனர *(Silva,K.M.De.,1981,pp.98-99)*.

தொடர்ந்து போர்த்துக்கேயர்கள் வந்த தடத்தினைப் பின்பற்றி கீழைத்தேயங்களில் செல்வாக்குச் செலுத்தியவர்கள் டச்சுக்காரர்கள். நெதர்லாந்தின் வடபகுதியில் காணப்பட்ட சிறிய அரசுகள் இணைந்து 1581இல் ஐக்கிய மாகாணக் குடியரசினைத் தாபித்துக்கொண்டன *(இளையதம்பி.மு..1969.ப.172).* ஸ்பெயினிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்ட டச்சுக்காரர்கள் நாளடைவில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தில் முன்னேற்றங் கண்டனர். பட்டேவியாவினைத் தங்களது கீழைத்தேய நாடுகளின் தலைமையகமாக ஆக்கிக் கொண்ட டச்சுக்காரர்கள் இலங்கையில் காணப்பட்ட கறுவாவினால் கவரப்பட்டனர். அதுமட்டுமன்றி தென்னிந்தியத் துறைமுகங்களைத் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதன் மூலமாக அவர்களின் ஆதிக்கச் செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொள்ளலாமென்ற எண்ணமும்கூட டச்சுக்காரர்கள் இலங்கைமீது கவனத்தினைத் திருப்புவதற்கான காரணங்களிலொன்றாகும் *(Arasaratnam. S,1958, p.106).* 1602இல் முதன் முதலாக இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட டச்சுக்காரர்களுக்கு கண்டி மன்னர்கள் அனுசரணை வழங்கினர் (Gunasingam. M, 2005, 227). குறிப்பாக அக்காலப்பகுதியில் கண்டியரசன் இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயர்களை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு டச்சுக்காரர்களின் உள்நோக்கத்தினை ஆராய்வதனை விடுத்து அவர்களது உதவியினைப் பெற்றுக்கொள்வதிலேதான் அதிகளவுக்கு அக்கறை காட்டியிருந்தான் *(ஐடினை).*

1652இல் ஐரோப்பாவில் போர்த்துக்கேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையிலே சமாதானம் நீங்கிய நிலையில் இலங்கையில் முழுமையான அளவில் தங்களது ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு டச்சுக்காரர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியது *(அரசரட்ணம்.சி..1959.82).* தொடர்ந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றி வந்த இவர்கள் 1658இல் வான்கோன்ஸ் *(Van Goens)* தலைமையில் பெரிய படையொன்றுடன் புறப்பட்டு முதலில் மன்னாரையும் நான்கு நாட்களின் பின்பாக யாழ்ப்பாணக்குடாநாட்டினையும் அதனுடன் சேர்ந்த பகுதிகளையும் போர்த்துக்கேயர்களிடமிருந்து மீட்டுத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். டச்சுக்காரர்களின் செல்வாக்கினுள் கொழும்பு வந்தமையின் பின்னராகவும் வடபிரதேசம் போர்த்துக்கேயர்களின் ஆதிக்கத்தின் கீழேதான் காணப்பட்டது. இதனால் அவர்களது வட ஆள்புலத்து அதிகாரத்திற்கு ஆதாரமாக விளங்கிய மன்னார். ஊர்காவற்றுறை. யாழ்ப்பாணக் கோட்டைகளைக் கைப்பற்ற வேண்டியிருந்தது *(குணராசா.க..2001.ப.48).* மன்னாரில் விளைந்த முத்துக்களும் யாழ்ப்பாணத்தின் யானை வர்த்தகமும் டச்சுக்காரர்களை இலங்கையின் வடக்குநோக்கி நகர்வதற்கு அடிப்படையான காரணமாக இருந்திருக்குமென்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

## பண்பாட்டுச் செல்வாக்கு

பொதுவாகப் பண்பாடென்பதனை மிகத்தெளிவாக வரையறுத்துக் கூறுவது கடினமானதாகும். மனிதர்கள் மட்டுமே பண்பாடு என்ற சொல்லோடு தொடர்புடையவர்கள். மேலும் இது மட்டுமே மனிதர்களைப் பிற விலங்கினங்களிடமிருந்து வேறுபடுத்தியும் காட்டுகிறது. பண்பாடு என்னும் கருத்து இலக்கியவியல். வரலாற்றியல். உளவியல். சமுதாயவியல். மானிடவியல் போன்ற பல துறைகளில் பல நிலைகளில் பயன்படுத்தப்படுவதால் அதற்கு வரையறையும் பலவாறாக உள்ளது. அதாவது பண்பாடு பற்றிய வரையறை ஏறத்தாள 160க்கும் மேலாகக் காணப்படுகின்றமை

குறிப்பிடத்தக்கது. எனவே டச்சக்கார்களது ஆட்சியின் பயனாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட மாற்றங்களில் பண்பாடு தொடர்பான மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை.

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கையுடன் நேரடியான உறவுகளை ஏற்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்களுக்கு யாழ்ப்பாணத்துடனான அவர்களது உறவு காலந்தாழ்த்தியே ஏற்பட்டது *(Silva,Cosme., ,1994,p.15).* அந்தளவுக்கு அவர்களுக்கு இப்பகுதி அவசியப்படவில்லை. அதனால் அவர்கள் தங்களுக்குச் சாதகமான ஆட்சியாளர் ஒருவரை யாழ்ப்பாணத்தில் அரசராக்குவதுடன் மட்டும் நின்றுகொண்டனர். அது சரிவராத சந்தர்ப்பங்களிலெல்லாம் யாழ்ப்பாணத்தின்மீது தாக்குதல்களை மேற்கொண்டு அச்சுறுத்தியும் வந்தனர். இருப்பினும் யாழ்ப்பாணத்தின் மீதான அரசியல், பொருளாதாரச் செல்வாக்குகள் ஆகியன இலங்கையின் பிற பகுதிகளில் போர்த்துக்கேயர்கள் தங்களது ஆதிக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டிருக்கையில் யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டு விட்டது. ஆனால் பண்பாட்டுச் செல்வாக்கானது யாழ்ப்பாணத்தின்மீது போர்த்துக்கேயர்களது நேரடியான ஆட்சி ஏற்படுத்தப் பட்டதன் பின்பாகவே இடம்பெற்றதெனலாம். ஆனால் டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை போர்த்துக்கேயர்களிடமிருந்து 1658இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றியபோதே யாழ்ப்பாணக்குடாநாடும் அவர்களது செல்வாக்கிற்கு உட்பட்டுவிட்டது. இதனால் அரசியல் செல்வாக்கும் பண்பாட்டுச் செல்வாக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட சமகாலத்தேய செல்வாக்குகளாகக் காணப்பட்டன.

## சமயம்

டச்சுக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குகளில் இன்றுவரை நீடித்துத் தொடர்ந்து வருகின்ற செல்வாக்கு அவர்களால் இலங்கையில் பரப்பப்பட்ட புரட்டஸ்தாந்து சமயம். டச்சுக்காரர்களின் கைகளுக்கு யாழ்ப்பாணம் சென்ற சமயத்தில் இங்கே இந்துமதம், இஸ்லாமியமதம், கத்தோலிக்க சமயம் போன்ற மதங்கள் காணப்பட்டன. அந்த வகையில் பன்முகச் சமூகப் பண்பாடானது புதிய வடிவத்தினைப் பெற்றிருந்த காலமாக அக்காலப்பகுதி அமைந்திருந்தது *(கிருஸ்ணராஜா.செ.,2000,ப.237).* இவற்றுள் கத்தோலிக்க சமயந் தவிர்ந்த ஏனைய சமயங்கள் நலிவுற்ற நிலையிலேயே காணப்பட்டு வந்தன. போர்த்துக்கேயர்களின் ஆட்சியில் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த இவை டச்சுக்காரர்களின் ஆட்சியில் மற்றொரு நெருக்கடியினையும் சந்திக்க வேண்டியிருந்தது.

குறிப்பாக டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை அவர்களது வர்த்தக மற்றும் புரட்டஸ்தாந்து மதப்பரப்புச் செயற்பாடுகளுக்கு அக்காலப்பகுதியில் பலமான நிலையில் காணப்பட்டு வந்த கத்தோலிக்க மதமானது பெரிய தடையாகக் காணப்படுகின்றதெனக்கருதி அம்மதத்தினை யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமிருந்தே அகற்றுவதற்கு முற்பட்டனர் *(மேலது).* இப்பின்னணியில் போர்த்துக்கேயர்களின் மதப்பண்பாட்டின் வடிவங்களினையும் வழிபாட்டம்சங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் இவர்கள் இறங்கினார்கள். போர்த்துக்கேயர்களை முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் கடல்வலிமையையோ அல்லது வர்த்தகத்தினையோ மட்டும் ஒழித்தால் போகாது. கத்தோலிக்க சமயத்தினையும் அவற்றுடன் சேர்ந்த வகையில் ஒழிக்க வேண்டியிருந்தது. காரணம் கத்தோலிக்கமும் வர்த்தகமும்

போர்த்துக்கேயர்களுக்கு கீழைத்தேச நாடுகளில் வலிமையினைக் கொடுத்திருந்தன. *(Arasaratnam,S.,1965,pp.1-13).*

இதனால் டச்சுக்காரர்கள் இலங்கையினைக் கைப்பற்றிய உடனேயே கத்தோலிக்க சமயத்தினைத் தடைசெய்வதற்கான பல சட்டங்களை இயற்றினர். குறிப்பாக 1658இல் இயற்றப்பட்ட சட்டமொன்றின் பிரகாரம் கத்தோலிக்க சமயம் அனுட்டிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. கத்தோலிக்க குருமார்களை மறைத்து வைத்திருப்பவர்களுக்கும் ஆதரவளிப்பவர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது *(Arasaratnam,S., 1982, pp.191-205).* கத்தோலிக்கச் சடங்குகள் புரட்டஸ்தாந்து திருச்சபைகளில் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மரணவரி புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கு நீக்கப்பட்டது.

கத்தோலிக்க சமயத்திலிருந்த மூடநம்பிக்கைகளை யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை இலகுவாகச் சீர்திருத்தமதமாகிய புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாற்றிவிடலாமென டச்சுக்காரர்கள் எண்ணினர் *(குணசிங்கம்.மு..2008.ப.243).* இதன் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் புரட்டஸ்தாந்து மத்தினை உடனடியாகப் பரப்புவதற்கான நடவடிக்கையில் இறங்கினர். அந்தவகையில் டச்சுக்காரர்களின் ஆரம்பகால மதமாற்ற நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவர் போல்தேயு (Rev. Baldaeus) சுவாமிகள் என்பவரே. 1656இல் இலங்கை வந்த இவர் டச்சுக்காரர்கள் போர்த்துக்கேயர்களிடமிருந்து இலங்கையினைக் கைப்பற்றுகின்ற இறுதி முயற்சியில் ஈடுபட்ட சமயத்தில் அவர்களுக்கு ஆன்மீகவழிகாட்டியாகச் செயற்பட்டவரென்ற கருத்து நிலவுகின்றது. புரட்டஸ்தாந்து சமயத்தினைப் பரப்பவதற்கு யாழ்ப்பாணம் சிறந்த இடமெனக் கண்ட டச்சுக்காரர் மேலிடமானது தொடர்ந்து இவர் இலங்கையினைவிட்டுச் செல்கின்ற வரை கத்தோலிக்க சமயத்தின் செல்வாக்கினை யாழ்பாணக்குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி இலங்கையிலிருந்தே அகற்றி டச்சுப்புரட்டஸ்தாந்து மதத்தினை இலங்கையில் செல்வாக்குப் பெறச் செய்கின்ற முயற்சியிற்கு இவரைப் பயன்படுத்தியது *(மேலது).*

டச்சுக்காரர்கள் தங்களது காலப்பகுதியில் போர்த்துக்கேயர்களின் காலத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களையும் பாடசாலைகளையும் அப்படியே மதமாற்றச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தினர். யாழ்ப்பாணத்திருந்த சபையானது காலி, கொழும்பு, மன்னார் போன்ற பகுதிகளிலிருந்த சபைகள் போன்று பிரதான புரட்டஸ்தாந்து திருச்சபையின் உறுப்பினராக இயங்கியது *(Arasaratnam,S.,1965,pp.1-13).* இவற்றில் போதகர் ஒருவரும் அதிகாரிகள் பலரும் அங்கத்துவம் பெற்றிருந்தனர். போர்த்துக்கேயர்கள் தங்களது காலப்பகுதியில் சமயத்தினைப் பரப்புவதற்குக் கையாண்ட வழிமுறைகளையே இவர்களும் கையாண்டனர். வினாவிடைகளைத் தயாரித்து அவற்றின் மூலமாகச் சமயத்தினைப் பரப்பினர். சுதேச மொழிகளை இதன் பொருட்டுக் கற்று அவ்வழியே சமயத்தினைப் பரப்பினர். தொழில் ரீதியான சலுகைகள், மேலைத்தேய கல்விமுறைகள் என்பன உயர் வகுப்பினர்களை மதமாற்றஞ் செய்யத் தூண்டியது. இவற்றினைவிடச் சாதிக்கட்டுப்பாடுகள், கொடுமையான சீதன முறைகள் என்பனவும் அதிகளவானவர்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் மதமாற்றம் செய்யத்தூண்டியதெனலாம். புரட்டஸ்தாந்து மத அடிப்படைக் கோட்பாடுகள் தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டன. இவர்கள் இலங்கையில் சமயப்

போதகர்களைத் தெரிவு செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இரண்டு செமினரிகளைத் திறந்தனர் *(அருமைநாயகம். க.,1967. ப.37).*

மேலும் போர்த்துக்கேயர்களைப் போலன்றி டச்சுக்காரர்கள் தங்களது ஆட்சியின் இறுதிக்காலப்பகுதியில் இலங்கையர்களுக்கு மதச் சுதந்திரத்தினை வழங்கினர். இப்பின்னணியில் இந்து ஆலயங்கள் பல திருத்தப்பட்டன. பிராமணர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்து கிரியைகளை நடாத்தினர். இதற்குக்காரணம் டச்சக்காரர்கள் சுதேச மக்களது எதிர்ப்புக்களைச் சந்திக்க விரும்பாமல் இருந்திருக்கலாம். காரணம் அவர்களின் பிரதான இலக்கு சமயம் பரப்புவதனைவிடுத்து வணிகத்தினைப் பெருக்குவதாகக்காணப்பட்டதனால் இவற்றினைச்சிறப்பாக மேற்கொள்வதற்கு நாட்டு மக்களின் ஆதரவு அவசியமென்பதனை அறிந்திருக்க வேண்டும். இதன் காரணமாகச் சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்காலமாக டச்சக்காரர்களின் இறுதிக்காலத்தினைக் கூறலாம். ஆனால் கலாநிதி குணசிங்கம் டச்சக்காரர்களின் ஆரம்ப காலப்பகுதியில் சைவசமய மறுமலர்ச்சி ஏற்பட்டதாக கூறுகின்றார் *(குணசிங்கம்.மு., 2008.ப.245).* ஆனால் இது தவறென்பதனை பல்வேறு சான்றுகள் மூலமாக அறிய முடிகின்றது. ஆரம்பகாலங்களில் இவர்களும் போர்த்துக்கேயர்களைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் சுதேச மதங்களின் மீது கட்டுப்பாடுகளையும் கலையழிவுக் கொள்கையினையுமே மேற்கொண்டு வந்தனர். மேலும் இவரும் அதே நூலில் மற்றொரு இடத்தில் சைவமக்களும் தங்களது சமயத்தினை மறைவான பிரதேசங்களில் அனுட்டித்ததாகக் குறிப்பிடுகின்றமை ஆய்வாளர் இவ்விடயமாகக் கொண்டிருந்த முரண்பட்ட கருத்தினை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது *(மேலது).*

1680இல் டச்சு அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மக்கள் தொகையானது 169,299ஆகக் காணப்பட்டது. இவர்களில் 85 சதவீதமான மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்துள்ளனர். 1664இல் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமதம் தொடர்பான அறிக்கையானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மன்னாரிலும் காணப்பட்ட புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் தொகையானது 130,000 எனவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவர்களின் தொகை 104,000 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது *(Hague Arch., VOC, Inv.1246.f.19, மே.கோ. குணசிங்கம், மு.,2008.ப.230).* 1671இல் வெளிவந்த மற்றொரு அறிக்கையில் குடாநாட்டில் 142,357 தொகையான மக்கள் வாழ்ந்ததாகவும் அவர்களில் 141,456பேர் கிறிஸ்தவர்கள் எனவும் கூறுகின்றது *(ஐடினை.இ Inv.1280.ff127-244, மே.கோ. குணசிங்கம். மு.,2008.ப.231).* ஆனால் இத்தகைய தரவுகள் டச்சக்காரர்களால் எடுக்கப்பட்ட தகவல்களாக இருப்பதனால் பெருமளவிற்கு நம்பகத்தன்மை அற்ற தரவுகளாகவே இவை உள்ளன. இறுதியாகப் பெறப்பட்ட அறிக்கையினை நோக்கினால் சைவர்களோ அல்லது இஸ்லாமியர்களோ குடாநாட்டில் முற்றாக வாழவில்லையென்ற நிலையே காணப்படுகின்றது. அக்காலப்பகுதியில் வெளியுலகத்திற்கு கிறிஸ்தவர்களாகவும் வீட்டில் இந்துக்களாகவும் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் பகலில் தேவாலயங்களுக்குச் செல்பவர்களை வைத்துக்கொண்டு கணிப்பிடுதல் தவறானது. மேலும் டச்சுக்காரர்கள் தங்களது ஆட்சிக்காலத்தின் இறுதியில் சமயச்சுதந்திரத்தினை வழங்கினார்களென்றால் சைவர்கள் எனப்பட்ட ஒரு குறிக்கப்பட்ட தொகையினர் காணப்பட்டதன் பின்னணியில் அவர்களின் ஆதரவினைப் பெறுவதற்காகவே என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மன்னாரிலும் புரட்டஸ்தாந்து சமயம் பரப்பப்பட்ட அளவிற்கு வன்னிப் பகுதிகளில் பரப்பப்படவில்லை. காரணம் இப்பிரதேசங்களில் இவர்களது செல்வாக்கு அதிகளவில் ஏற்படவில்லை. அதுமட்டுமன்றி அக்காலப்பகுதியில் வன்னிப்பகுதி மக்கள் தங்களின் மதங்களில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களாகவும் விளங்கினர். ஆரம்பத்தில் டச்சுக்காரர்களின் மதம் பரப்புகின்ற நடவடிக்கைகள் இலங்கையில் வெற்றியடைந்தது போன்று காணப்பட்டாலும்கூட அது நிலையானதாக அமையவில்லை. காரணம் அவர்களது ஆட்சியானது நாட்டினை விட்டு அகன்றதுமே அம்மதத்தினைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

டச்சக்காரர்களின் சமயப் பிரச்சார நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெறாமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இலங்கையில் மக்கள் தொகையில் மிகவும் குறைவாகக் காணப்பட்ட பறங்கியர்கள் மத்தியிலேதான் தனித்துச் செல்வாக்குப் பெற்ற மதமாக இவர்களது மதம் காணப்பட்டது. விவிலிய நூல்களை ஆதாரமாகக்கொண்ட இச்சமயத்தினை விளங்குவதற்கு அக்கால யாழ்ப்பாண மக்களிடையிலே போதிய கல்வியறிவு காணப்படவில்லை. மேலும் விக்கிரக ஆராதனைகளை புரட்டஸ்தாந்து மதம் கொண்டிருக்கவில்லை. கத்தோலிக்க சமயத்தின் சில அனுட்டான முறைகள்கூட சைவமக்களின் பண்பாட்டுடன் ஒத்தவகையில் அமைந்திருந்தன. சைவத்தமிழ்ப் பண்பாட்டில் ஊறிய மரபு முறைமைகள் கத்தோலிக்க சமய வாழ்வுமுறைமையிலும் வழிபாட்டு மரபிலும் இயல்பாகவே இணைக்கப்பட்டன *(சந்திரகாந்தன்.ஏ.ஜே..1993.ப.76).* எல்லாவற்றினைவிட வர்த்தகமே அவர்களின் பிரதான நோக்கமாக விளங்கியது. இவ்விடயமாக இவர்கள் பல சட்டங்களைப் பிறமதங்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டபோதும்கூட அவற்றினை நடைமுறையில் இவர்களால் செயற்படுத்த முடியவில்லை *(அருமைநாயகம். க..1967. ப.38).*

பொதுப்பட பார்த்தால் டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் விட்டுச் சென்ற முக்கியமான பண்பாட்டுச் செல்வாக்குகளிலொன்றாக அவர்களது புரட்டஸ்தாந்துமதம் காணப்படுகின்றது. கத்தோலிக்கர்களுடன் ஒப்பிடுகின்றபோது இவர்களது எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும் இன்றுவரை அழிக்கமுடியாத பண்பாட்டுச் செல்வாக்காக யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது.

## புரட்டஸ்தாந்து தேவாலயங்கள்

டச்சுக்காரர்களின் பிரதான நோக்கம் வணிகம் என்பதாகக் காணப்பட்டதனால் மதம் பரப்புதலுக்குப் போர்த்துக்கேயர்களைப் போன்று வெறித்தனமான செயல்களில் ஈடுபடவில்லை. இதற்காகப் போர்த்துக்கேயர்களைப் போன்று செலவுகளும் அதிகம் செய்யவில்லை. போர்த்துக்கேயர்களின் தேவாலயங்களையே பெருமளவிற்குத் தங்களுடைய மதவழிபாட்டுத் தலங்களாக மாற்றிக்கொண்டனர். அல்லது சமயப்பிரச்சாரத்துக்குத் தேவையான திருச்சபைகளை போர்த்துக்கேயரது திருச்சபைகள் காணப்பட்ட இடங்களில் டச்சுக்காரர்கள் அமைத்துக் கொண்டனர்.*(Pieris,P.,1995,p.59-64).*

டச்சுக்காரர்களின் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 32 தேவாலயங்களும் இலங்கை முழுவதும் 240 தேவாலயங்களும் காணப்பட்டதாக டச்சுக்காரர்களின் ஆவணங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன *(சி.டி.வேலுப்பிள்ளை.1964. ப.23).* சிறிய கோயில்களாயினும்

கற்களைக்கொண்டு மிக நேர்த்தியான முறையில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தன. கத்தோலிக்க தேவாலயங்கள் காணப்பட்ட இடங்கில் தங்களது ஆலயங்களை அமைத்தோ அல்லது அவற்றினை அழித்தோ அல்லது அப்படியே தமது வழிபாட்டிடங்களாகவோ மாற்றியோ தங்களது வழிபாட்டிடங்களை அமைத்திருந்தனர். இந்த ஆலயங்களில் அரசாங்கத்தின் கட்டளைக்குப் பயந்து தினமும் ஆயிரக்கணக்கானோர் வழிபாட்டுக்காக வந்து சென்றனர். மல்லாகத்தில் போர்த்துக்கேயர்கள் கட்ட ஆரம்பித்த ஆலயத்தினை டச்சுக்காரர்கள் கட்டி முடித்தனர். சங்கானை. மணற்காடு. மயிலிட்டி. அச்சுவேலி. வட்டுக்கோட்டை. சாக்கோட்டை. சாவகச்சேரி. முகமாலை. பண்டத்தரிப்பு போன்ற பல இடங்களிலும் டச்சுக்காரர்களினால் பல கிறிஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டன *(மேலது).* போர்த்துக்கேயர்களைப்போலவே இவர்களும் கல்வியினை சமயத்தினைப் பரப்புவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இதன்காரணமாகவே திருச்சபையினை அண்மித்தவகையில் பாடசாலைகளும் அவர்களால் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சைவஆலயங்கள்

டச்சுக்காரர்களின் ஆட்சியின் இறுதியில் சுதேச சமயங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைச்சட்டங்கள் நீக்கப்பட்டமையினால் பிற்காலத்தில் இந்து சமயம் எழுச்சியடைவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. தொடர்ந்து ஈழத்து இந்துக்கள் நீண்டகாலமாக செல்வாக்கற்றிருந்த இந்து சமயத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அந்நியர் ஆட்சியில் சிதைவுற்றிருந்த கோயில்களை புனருத்தாரணம் செய்தல். புதிய கோயில்களைக் கட்டுதல் போன்றவற்றில் ஈடுபட்டனர். *(பேராசிரியர் புஷ்பரட்ணம்.ப..நேர்காணல்)* டச்சுக்காரர்களினால் வழங்கப்பட்ட சமயச்சுதந்திரத்தின் தாக்கத்தினை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்து ஆலயமொன்றில் காணப்பட்டுள்ள கோபுரம் பறைசாற்றுகின்றது. இங்கு அமைந்துள்ள கைலாசநாதர் ஆலயத்தில் காணப்படுகின்ற விமானத்தின் சிற்பங்களில் உள்ள உருவங்கள் டச்சுக்காரர்களின் ஆடைகளையும் அவர்களது தலை அலங்காரங்களையும் கொண்டு காணப்படுவதனை அவதானித்துக்கொள்ள முடிகின்றது. இது இந்துசமய வளர்ச்சியானது டச்சுக்காரர்களின் இயல்புகளை உள்வாங்கிய வகையில் எழுச்சியடைந்தமையினை உணர்த்துகின்றது.

ஆலயப்புனரமைப்பு மற்றும் ஆலயங்களை அமைக்கின்ற பணிகளுக்கு அரசின் அனுமதியை இக்காலத்தில் இந்துக்கள் பெறவேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் வண்ணார்பண்ணையில் இருந்த பெரும் செல்வந்தரான வைத்திலிங்கச் செட்டியார் கி.பி 1787இல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்ட உத்தரவுபெற்று 1791இல் அக்கோயிலைக் கட்டி முடித்து கும்பாபிசேகமும் செய்துகொண்டார் *(இராசநாயகமுதலியார்.1933. ப.186).* மேலும் யாழ்ப்பாணத்திலமைந்துள்ள பெருமாள் கோயிலும் இக்காலப்பகுதியிலே அமைக்கப்பட்ட கோயிலே. தென்னிந்தியாவிலிருந்து வந்த சோனியச்செட்டிகள் தாங்கள் வழிபாடு செய்ய வேண்டி இக்கோயிலை அமைத்தனர். *(மேலது)* மேலும் நயினை நாகபூசணி அம்மன் கோயில். மாவிட்டபுரம் கந்தசாமி கோயில். போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்ட நல்லூர் கந்தசாமி கோயில் போன்றனவும் இக்காலத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டவையே. இவைதவிர நீராவியடியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம். வீரமாகாளி அம்மன் ஆலயம். வண்ணார்பண்ணை மேற்கு

பிள்ளையார் ஆலயம், வேம்படிப் பிள்ளையார் கோயில் என்பனவெல்லாம் டச்சுக்காலத்தைச் சேர்ந்தவையே *(சைவசமயக்கோயில்கள் பற்றிய பதிவு, 1898).*

## கல்வி

போர்த்துக்கேயர்களைப் போலவே இவர்களும் சமய நோக்குடன் கல்விப்பணியில் ஈடுபட்டுக்கொண்டாலும் நாளடைவில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பல பாடசாலைக்கல்வி முறையினை உருவாக்கிக்கொண்டனர். டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை அவர்கள் போர்த்துக்கேயர்களைப் போன்று தங்களின் கல்விச்செயற்பாட்டினை முழுவதுமாக சமயக்குழுக்களின் பொறுப்பில் விடாமல் அரச முகாமைத்துவத்தின் கீழேயே அதனை வைத்திருந்தனர். சமுதாயத்தின் தேவையினைக் கருத்தில் கொண்டு கல்வியினை அவர்கள் மாற்றியமைத்தனர். இதனை டச்சுக்காரர்கால கல்வி நடவடிக்கையின் சிறப்பான அம்சங்களிலொன்றாகக்கூடக் கொள்ளலாம். அந்தவகையில் இவர்கள் இலங்கையில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வியினை உருவாக்குவதற்கு முயன்றவர்கள் என்ற வகையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர் *(Sasikala,K.,2001,p.83).* இவர்கள் போர்த்துக் கேயர்களைப் போன்று மக்களை மதம் மாற்றுகின்ற நிறுவனமாகப் பாடசாலையினையே பயன்படுத்தினர். யாழ்ப்பாணம் உட்படத் தமது ஆட்சிக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களில் கோயிற்பற்றுப் பாடசாலைகளை அமைத்தனர். (*Hague Arch., Inv, 326 3ff 677 – 678, மே.கோ. குணசிங்கம். மு..2008.ப.231).*

1690இல் நல்லூரில் தமிழ்ச் செமினரி நிறுவப்பட்டது. இது டச்சக்காரர் அமைத்த முதலாவது உயர்கல்வி நிறுவனமாகக் காணப்பட்டது *(குணசிங்கம்.மு..2008.ப.250).* 1769களில் வலிகாமம், வடமாராட்சி, தீவுப்பகுதிகள் போன்றவற்றிலும் பல பாடசாலைகள் டச்சக்காரர்களின் நிர்வாகத்தின் கீழ் சிறப்பாக இயங்கி வந்தன. வண்ணார்பண்ணையில் 50 மாணவர்களுடன் இயங்கிய டச்சுப்பாடசாலை பற்றியும் சிலாபத்தில் 80 மாணவர்களுடன் இயங்கிய தமிழ்பாடசாலை தொடர்பாகவும் குறிப்புக்கள் உள்ளன (*Hague Arch., Inv, 326 3ff 677 – 678, மே.கோ. குணசிங்கம். மு..2008.ப.231).* 1663இல் மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் காணப்பட்ட பாடசாலைகளில் 15012 மாணவர்கள் கற்றுவந்துள்ளனர். இது இரண்டு வருடங்களில் 18,000 ஆக உயர்ந்து கொண்டது. *(ஐடினை)* 1756இல் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்றவற்றில் கல்வி கற்றுவந்த மாணவர்களின் தொகையானது 30859ஆகக் காணப்பட்டதனைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன *(கிருஸ்ணராஜா.செ..2000.ப.237).* முன்னைய காலங்களுடன் ஒப்பிடுமிடத்து டச்சுக்காரர்கள் அறிமுகப்படுத்திய கட்டாயக் கல்வியின் காரணமாக பெண்கல்வியானது ஓரளவுக்காவது வளர்ச்சி கண்டதெனலாம். கட்டைவேலி கோயிற்பற்றுப்பாடசாலை, புலோலி, காரைநகர் கோயிற்பற்றுப் பாடசாலைகள் டச்சுக்கார்களால் ஆரம்பித்து நடத்தப்பட்ட கோயிற்பற்றுப்பாடசாலைகளில் முக்கியமானவை.

## இலக்கியங்கள்

டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் சுதேச இலக்கியங்கள் பல வளர்ச்சி கண்டன. இவற்றினை டச்சு ஆவணங்களின் மூலமாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. காரணம் தங்களது மதப்போதனையின் நிமித்தமாக அவர்கள் தமிழைக் கற்கவும் அம்மொழியினைப்

பற்றி தெரிந்துகொள்ளவும் முனைந்தனர். இத்தகையதொரு பின்னணியில்தான் அவர்களின் மதசார்பான படைப்புக்கள் தமிழில் மொழி பெயர்கப்பட்டு வெளியிடப்பட்டன. எடுத்துக்காட்டாக போல்டேயஸ் சுவாமிகள் 'Beschrgving Van Malabar en Coromandel' என்ற தன்னுடைய சொந்தப் படைப்பினை 1671இல் வெளியிட்டிருந்தார் *(Baldaeus,p.,1672,pp.190-191).* மேலும் இக்கால தமிழர்களின் வரலாற்றினைக் கூறுகின்ற யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலினை மயில்வாகனப்புலவர் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதி வெளியிட்டார். உறுதியானகாலம் சரியாகத் தெரியவில்லை. இது டச்சுத்தேசாதிபதி மக்ரா என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டது. இக்காலப்பகுதியில் எழுந்த மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த படைப்புத் தேசவழமை என்ற நூலாகும். தேசாதிபதி சைமனுடைய முயற்சியினால் 1707இல் டச்சு அரசாங்கத்தினால் இது பிரகடனப்படுத்தப்பட்டது *(கிருஸ்ணராஜா. செ., 2002, 250).*

சின்னத்தம்பிப்புலவரினால் எழுதப்பட்ட கல்வளையந்தாதி என்ற பிரபந்தமும் மறைசையந்தாதி என்ற நூலும் இக்காலத்திற்குரியதே. சேனாதிராய முதலியாரினால் நல்லைவெண்பா, நல்லையந்தாதி என்பனவும் எழுதப்பட்டன. மேலும் டச்சுக்காரர்களின் காலத்தில் நாடகங்கள் பல எழுதப்பட்டன. கணபதி ஐயரினால் அலங்காரரூபநாடகம், அதிரூபவதி விலாசம், வாலபீக நாடகம் என்பன எழுதப்பட்டன. முத்துக்குமாரசாமிப்புலவரினால் தேவசகாய நாடகம் இயற்றப்பட்டது *(மேலது).* இத்தகைய இலக்கியங்களெல்லாம் டச்சுக்காரர்களின் ஆட்சியின் நடுப்பகுதியிலோ அல்லது மதச்சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னணியிலோதான் தோன்றியிருக்க வேண்டும்.

## மொழி

டச்சுக்காரர்களின் ஆட்சியானது பல ஆண்டுகள நீடித்து வந்தமையின் பின்னணியில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் விட்டுச் சென்ற முக்கியமான பண்பாட்டுச் செல்வாக்காக அவர்களுடைய மொழி காணப்படுகின்றது. இவர்கள் யாழ்ப்பாண மக்களுக்குப் புதியதாக அறிமுகப்படுத்திய ஆட்சிமுறை, தொழில், சமயம், உணவு, உடை, வாழ்க்கைமுறை போன்றவற்றினைக் குறிக்கின்ற டச்சுமொழிச் சொற்கள் தமிழில் காணப்படுகின்றன.

உலாந்தா, பிசுக்கால், சக்கடத்தார், நொத்தாரிசுலாச்சி, பீறோ, பேத்தல், வக்கு, தாச்சி, பக்கூசு, போச்சி, துட்டு, வங்குறோட்டு போன்ற டச்சுமொழிச் சொற்களை இதற்கு எடுத்தக்காட்டாகக் குறிப்பிடலாம். யாழ்ப்பாண மக்களுடன் இவர்கள் நெருங்கிப் பழகியமையினால் டச்சுமொழிச் சொற்கள் யாழ்ப்பாணத்தில் அதிகம் பேசப்படுகின்ற சொற்களாயிற்று. அதேநேரத்தில் இவர்களின் காலத்தில் தமிழ்மொழியானது கிறிஸ்தவ சிந்தனைகளுக்கும் அனுட்டானத்துக்கும் சிறந்த கருவியாக மாறியதென்பதனையும் மறுப்பதற்கில்லை. போல்டேயஸ் சுவாமிகளே தமிழ் மொழியினைக் கற்று மற்றைய போதகர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

## கோட்டைகள்

டச்சுக்காரர்கள் கட்டிடக்கலையில் சிறப்புற்று விளங்குகின்றனர். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர்களால் அமைக்கப்பட்டிருந்த கோட்டைகளை இவர்கள் புனர்நிர்மாணம் செய்து நவீனமுறைகளில் தங்களுக்கேற்ற வகையில் பாதுகாப்பான ஏற்பாடுகளுடன் கட்டினர். யாழ்ப்பாணக்கோட்டை, ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள கோட்டை, பூநகரிக்கோட்டை,

மன்னார்கோட்டை போன்ற கோட்டைகளை இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட கோட்டைகளுக்கு எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிடலாம். போர்த்துக்கேயர்களிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளெல்லாம் ஐங்கோண வடிவத்தில் மாற்றியமைக்கப்பட்டன. *(சசிதா, கு.. 2010. பக்.111-113).* வரணி மற்றும் நெடுந்தீவு போன்ற பகுதிகளிலும் டச்சுக்காரர்கள் அமைத்த கோட்டைகளின் எச்சங்கள் இருப்பதாகப் பேராசிரியர் கிருஷ்ணராஜா தன்னுடைய இலங்கை வரலாறு பாகம் 2 நூலில் குறிப்பிட்டாலும் நிரூபிப்பதற்கு மேலதிக ஆதாரங்கள் வேண்டியுள்ளது. இத்தகைய கோட்டைகளை போர்த்துக்கேயர்கள் எத்தகைய நோக்கங்கள் கருதிக் கட்டினார்களோ அத்தகைய நோக்கங்களே இவர்களது நிர்மாணத்திலும் காணப்பட்டது. அந்நியரிமிருந்து பாதுகாப்பு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை முகாமைப்படுத்துதல் என்பன இவற்றின் முக்கிய நோக்கங்களாக விளங்கின.

இவர்கள் கோட்டைகளைப் புனருத்தாரணம் செய்து அமைத்தபோது 17ஆம் நூற்றாண்டில் நவீன முறைகளில் விசாலமான கொத்தளங்களோடும் பீரங்கிகளை வைத்துச் சுலபமாக வெடிக்கக்கூடிய மாதிரிக் கோட்டையின் முடக்குகளில் முனைப்புக்களையும் அமைத்துக்கட்டப்பட்ட கோட்டை கட்டுகின்ற முறைகளைப் பின்பற்றினர். டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்திற்குப் பின்வந்த ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணக் கோட்டையில் தற்போது அழிந்த நிலையில் காணப்படுகின்ற இராணிமாளிகை ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டதே. சில பகுதிகள் கோட்டைகளில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறைக்கோட்டை மட்டுமே பெருமளவிற்கு டச்சுப்பாணியில் இன்றும் காணப்படுகின்றது. இக்கோட்டைகளின் பலமே பலருக்கு யுத்தகாலங்களில் பாதுகாக்கின்ற அரணாகப் பயன்பட்டது.

## வாழ்விடங்கள்

டச்சுக்காரர்களின் கட்டிடக்கலையின் பாணியானது யாழ்ப்பாண மக்களின் வீடுகட்டுகின்ற அமைப்பிலும் காணப்படுகின்றன. கடற்கரையிலிருந்து எடுக்கப்பட்ட கோரல் கற்களினால் வீடுகளையும் கோட்டைகளையும் அமைக்கின்ற முறையினை இலங்கையருக்கு இவர்கள் அறிமுகப்படுத்தினர். அகண்ட விறாந்தைகள், உயர்வான முகடுகள், தனித்துவமான வளைவுகள், சிறப்பான கொரிந்தியன் தூண்கள், முகப்பின் இருமருங்கிலும் இலச்சினைகள் என டச்சுக்காரர்களின் இல்லங்கள் காணப்பட்டன. யாழ்ப்பாணக்குடாநாட்டில் கட்டிட மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு காணப்பட்டதனால் இவர்கள் கட்டிடத்தேவைகளுக்காக கடலிலிருந்து எடுக்கப்பட்ட முருகைக்கற்கள் அல்லது கடற்பவளக் கற்களைப் பயன்டுத்தியிருந்தனர். வீடுகளின் தளங்களுக்கு இறக்கமதி செய்யப்பட்ட மாபிள் கற்கள் பதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணக்குடாநாட்டின் மத்தியிலுள்ள ஐந்தாம் குறுக்குத் தெருப்பகுதிகளிலுள்ள வீடுகள், கடற்கரைப் பகுதியிலுள்ள சில வீடுகள் டச்சுக்காரர்களின் பாணியிலியே இன்றுங் காணப்படுகின்றன.

## வீதிகள்

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் டச்சுக்காரர்களினால் அமைக்கப்பட்ட வீதிகள் அவர்களது பெயர்களைச் சொல்லுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து பல பகுதிகளுக்கும் இத்தகைய

தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. பல வீதிகள் இன்று அவர்களை ஞாபகப்படுத்துகின்ற வகையில் அவர்களது பெயரினாலேயே அழைக்கப்பட்டு வருகின்றன.

### வைத்தியசேவைகள்

வைத்தியதுறையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதியாக டச்சுக்காரர்களின் ஆட்சிகாலத்தினைக் குறிப்பிடலாம். மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதில் டச்சு நிர்வாகம் அக்கறை காட்டியது. இவர்களின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலைகளும் வைத்தியமுறைகளும் நன்கு வளர்ச்சியடைந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியசாலை, மயிலிட்டியிலுள்ள காசநோய் வைத்தியசாலை போன்றவைகளெல்லாம் டச்சுக்காரர்காலத்தில் நிறுவப்பட்டவைகளே *(கிருஸ்ணராஜா.செ., 2002, ப.262).*

### நிறைவுரை

1602இல் இலங்கையின் கரையோரங்களில் காலடி பதித்த டச்சுக்காரர்கள் 1658இல் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். தொடர்ந்து இவர்களின் ஆட்சியின் விளைவாக பல மாற்றங்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டன. அத்தகைய செல்வாக்குகளில் பண்பாட்டுச் செல்வாக்கும் குறிப்பிடத்தக்க வகையில் காணப்படுகின்றன. இவை மக்களின் நாளாந்த வாழ்வுடன் பிணைந்த வகையில் இன்று உள்ளன. யாழ்ப்பாண மக்கள் தெரிந்தோ தெரியாமலோ இவற்றுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். டச்சுக்காரர்கள் நாட்டினை விட்டு அகன்று பல வருடங்கள் கடந்த பின்னரும் அவர்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்களின் பண்பாட்டில் ஏற்படுத்திய செல்வாக்கு தொடர்ந்தும் இன்று அவர்கள் பெயர் சொல்கின்ற வகையில் காணப்படுகின்றன.

### உசாத்துணை நூல்கள்

### தமிழ்


1. அரசரட்ணம், சி. "இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்", *இளங்கதிர்* (கொழும்பு : தமிழ்ச்சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம்,1959).
2. அருமைநாயகம், க. "இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக்கொள்கை", *சிந்தனை.* இதழ் 4 (யாழ்ப்பாணம்: பல்கலைக்கழகம்,1967).
3. இராசநாயகமுதலியார்.செ. *யாழ்ப்பாணச் சரித்திரம்* (யாழ்ப்பாணம் : 1936).
4. இளையதம்பி, மு. *இலங்கைச் சரித்திரமும் ஐரோப்பியச் சரித்திரமும்* (யாழ்ப்பாணம் சிறிலங்கா புத்தகசாலை, 1969).
5. கிருஸ்ணராஜா. செ, *இலங்கைவரலாறு,* பாகம்-02 (யாழ்ப்பாணம்: பிறைநிலா வெளியீடு, 2000).
6. குணசிங்கம், மு. இலங்கையில் தமிழர் ( சிட்னி : எம்.வி. வெளியீடு, 2008).
7. குணராசா, க. *யாழ்ப்பாண வைபவமாலை - ஒரு மீள்வாசிப்பு* (யாழ்ப்பாணம் : கமலம் பதிப்பகம், 2001).
8. குணராசா.க., கமலா, கு., *இலங்கைச்சுருக்கவரலாறு* (யாழ்ப்பாணம் : கமலம் பதிப்பகம், 2008).

9. நடராசா.வ. (ப.ஆ). வரலாற்று உலா. யாழ்ப்பாணம் : யாழ்ப்பாணம் :சிவத்தமிழ் மானிட விடியற் கழகம். 2010).
10. பத்மநாதன். சி. *இலங்கைத் தேசவழமைகளும் சமூக வழமைகளும்* (கொழும்பு : குமரன் புத்தக இல்லம். 2001).
11. பத்மநாதன். சி. *யாழ்ப்பாண இராச்சியம்* (கொழும்பு: குமரன் புத்தக இல்லம். 2011).
12. வேலுப்பிள்ளை.சி.டி. *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்* (சுண்ணாகம் : 1964).

## English

13. Arasaratnam, S. "Dutch Sovereignty in Ceylon A Historical Survey of its Problems in Ceylon", *Journal of Historical and Social studies* (Peradeniya : University of Peradeniya,1958).
14. Arasaratnam, S. *The Dutch Power in Ceylon 1658 – 1687* (New Delhi : 1958).
15. Arasaratnam,S., J.H.O. *Paulusz on the 1638 Westerwolt treaty in Ceylon: A rejoinder (*Bijdragen tot de Taal-, Land- en Volkenkunde 138 1982).
16. Arasaratnam, S. "The Administrative Organisation of the Dutch East India Company in Ceylon",*The Ceylon journal of Historical and Social Studies*, January-December, Vol-8,1965.
17. Baldaeus,p., *Beschrijving der oost-Indiscche Kusten, Malabar en Choromandel* (Amsterdams, 1672
18. Brohier, R,l. *Changing Face of Colombo* (Colombo : Lake House Investments Ltd, 1984).
19. Gunasingam, M. *Primay Sources for History of the Sri Lankan Tamils* (Sydney : M.V. Publications, 2005).
20. Jeffries. Charles, *Ceylon - The Path to Independence* (London: Pall mall Press, 1962).
21. Marashall,R. Singer. *The Emerging Elite( Study of political leadership in Ceylon)* Cambridge: Cambridge Massachusetts Institute of Technology press, 1981).
22. Perera,S.G. *History of Ceylon* (Colombo : *Lake house*, 1948).
23. Perera,S.G., *The Jesuits in Ceylon* (Madurai: Denobili press, 1941).
24. Pieries,P,E. (ed) *The Dutch Power in Ceylon,1602-1670* (London : Corzonprees,1929).
25. Robrecht Boudens, "The Catholic Church in Ceylon frpm 1658 to 1687", *The Ceylon Historical Journal,* Vol-II, 1953.
26. Sasikala, K. *Origin and Development of the Education of Jaffna Women,* Master of Philoshopy, (Jaffna : University of Jaffna, 2001).
27. Silva.K.M.de, *A History of Sri Lanka* (Delhi: Oxford University Press, 1981).